மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

மின் இணைப்பு

***48930—திருமதி வி. கஸ்தூரி வாசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காடம்பாறை மலைவாழ் மக்கள் வசிக்கும் மரப்பாலம், வெள்ளிமுடி மற்றும் செட்டில்மெண்ட் பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் குடிமராமத்து நாயகன் என்றுதான் நாம் சொல்லி வந்தோம். ஆனால், மழைக்குச் சொந்தக்காரர், ராசிக்காரர் என்று சொல்கின்ற அளவிற்கு, மார்கழி மாதத்தில்கூட வானம் மும்மாரி பொழிகின்ற ஒரு ராசிக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியை, மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் அமைப்போம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், வானம் மும்மாரி பொழிகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பணியாற்றுவதற்கு மக்கள் வாக்களித்து சட்டமன்றத்திற்கு அனுப்பினால், இன்றைக்கு சட்டமன்றத்தைப் புறக்கணித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் மக்கள் அவர்களைப் புறக்கணித்து, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்

2021 பிப்ரவரி 4]

அவர்களை மீண்டும் முதலமைச்சராக ஆக்குவார்கள் என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினரது தொகுதியான வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காடம்பாறை பகுதி மலைவாழ் மக்கள் வசிக்கும் மரப்பாலம், வெள்ளிமுடி மற்றும் செட்டில்மெண்ட் பகுதிகளில், வனத் துறையின் ஒப்புதலோடு மின் துறையின் சார்பாக Solar power *மூலமாக மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

முற்பகல் 10–30

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், எங்களையெல்லாம் இந்த அவையிலே அமரவைத்து அழகுபார்த்த எங்கள் அன்னை; இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், தமிழக மக்கள் மனதிலே என்றும் நீங்காமல் இடம்பெற்றிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே சிறப்பாக அரசை வழிநடத்திச் செல்கின்ற, எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொரோனா என்னும் வைரஸ் நோய்த் தொற்று வந்த காலத்தில் அனைவரும் வீட்டிலேயே இருக்க வேண்டுமென்ற சூழ்நிலையிலும்கூட, அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தைத் திறந்துவைத்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நினைவு இல்லத்தையும் திறந்து வைத்திருக்கின்றார். அந்தவகையில் அம்மாவினுடைய அரசை சிறப்பாக வழிநடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாக என்றும் இருக்கின்ற*

ஜல்லிக்கட்டு நாயகன், தென்பாண்டிச் சிங்கம் எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தமிழகத்திலே கோயம்புத்தூர் மாவட்டத்தை அனைவரும் திரும்பிப் பார்க்கின்ற அளவிற்கு சிறப்பாக திட்டங்களைச் செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அனைத்துப் பணிகளையும் தனது தொகுதியில் மட்டுமல்லாமல், மற்ற தொகுதிகளுக்கும் சிறப்பாகச் செய்து தந்திருக்கின்ற எங்களுடைய கொங்கு இளவல், எங்களுடைய மாவட்டக் கழகத்தின் செயலாளரும், உள்ளாட்சித் துறை அமைச்சருமான, அன்புச் சகோதரர் மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஆம் ஆண்டில் இருண்டுகிடந்த தமிழகத்தை, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒளிவெள்ளமாக்கி, மின்மிகை மாநிலமாக்கி, அனைவருக்கும் 100 யூனிட் இலவச மின்சாரத்தை வழங்கினார்கள். இந்தச் சூழ்நிலையில் காடம்பாறை செட்டில்மெண்ட் பகுதியில் வசிக்கின்ற மலைவாழ் மக்களுக்கெல்லாம் நாம் மின்னிணைப்பு வசதி செய்து கொடுத்தால், அது அவர்களுக்கு வசதியாக இருக்கும்; அங்கே படிக்கின்ற குழந்தைகளெல்லாம் இருக்கின்றனர். அந்தப் பகுதிகளில் மழை அதிகளவில் பெய்துவருவதால், சோலார் மின் விளக்குகள் எல்லாம் சில நேரங்களில் எரிவதில்லை. எனவே, இந்த உதவியை கண்டிப்பாக நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கையைப் பொறுத்தவரையில், வனத் துறை எப்போது தடையில்லா சான்றிதழ் கொடுக்கின்றதோ, வனத் துறை எப்போது அங்கு பாதை அமைத்துத் தருகின்றதோ, அந்தப் பாதையைப் பயன்படுத்திட அனுமதி கொடுக்கின்றதோ, அப்போது அதுபோன்ற பகுதிகளிலே நாங்கள் மின்சாரம் கொடுப்பதற்குத் தடை ஏதுமில்லை. ஆனால், வனத் துறை அனுமதி கொடுப்பதிலும் ஒரு சிக்கல் இருக்கின்றது. அது என்னவென்று

2021 பிப்ரவரி 4]

சொன்னால், உச்ச நீதிமன்றம் ஓர் ஆணையிட்டிருக்கின்றது. அந்த ஆணையின்படி அனுமதி கொடுப்பதில் வனத் துறையினருக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தக் காரணத்தினால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, மலைவாழ் மக்களுக்கு எப்படியாவது மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, அனைத்து வீடுகளுக்கும் சூரிய ஒளி மின் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில் இப்போது கிட்டத்தட்ட 479 வீடுகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைத் தவிர, தமிழகம் முழுவதும் இதுபோன்று 3,971 வீடுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, எங்கெல்லாம், அதுபோன்ற வனப் பகுதிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் கிட்டத்தட்ட சுமார் 170 வீடுகளுக்கு Grid *மூலமாகவே மின்சார வசதி செய்து கொடுத்திருக்கின்றோம். ஏனென்று சொன்னால், அதற்கு அந்தத் தட வசதி இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்று நாங்கள் மின்சார வசதி செய்து கொடுத்திருக்கின்றோம்.*

அதுபோன்று பல்வேறு மலைப் பகுதிகளில், எங்கெங்கெல்லாம் அனுமதி கொடுக்கின்றார்களோ, அங்கெல்லாம் மின் வசதி செய்து கொடுக்கின்றோம். மின்வசதி கொடுக்க முடியாத சூழ்நிலையில்தான், அந்தப் பகுதி மக்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்பதற்காக, சூரிய ஒளி மின் வசதியை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தவகையிலே மின் வசதியை நாங்கள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் வனத் துறை அனுமதி கொடுக்கும்பட்சத்தில், முழுமையாக மின் பாதை அமைத்து, அவர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் அனுமதியோடு, மின்னிணைப்பு வசதி*

[2021 பிப்ரவரி 4

செய்து கொடுக்கிறேன் என்று சொன்ன மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நவமலை பவர் ஹவுஸ் செல்லும் சாலைகள், அங்கே சோலையாறு பகுதியிலிருந்து முடி என்ற இடத்திற்குச் செல்லும் சாலைகள், இவையெல்லாம் பவர்ஹவுஸ் செல்கிற சாலைகள்.— அதைப்போலவே, சேத்துமடை பகுதியிலே சர்கார்பதியிலிருந்து செல்லும் சாலைகள், இவையெல்லாம் சிறிது பழுதடைந்துள்ளன. அவற்றையும் சரி செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சாலைகள் மின்சார வாரியத்தின் சாலையாக இருந்தால், அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அவை பரிசீலிக்கப்படும். வனத் துறையின் சாலையாக இருந்தால் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு பெரும் தெய்வங்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். அவர்களுடைய வாரிசாக இன்றைக்குத் தமிழகத்திலே மிகச் சிறப்பான ஒரு நல்ல ஆட்சியைத் தருகின்ற நல்லாட்சி நாயகர், குடிமராமத்து நாயகர், காவேரிக் காப்பாளர் என்று பலதரப்பட்ட மக்களாலும் பாராட்டப்படுகின்ற மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–35

எங்கள் அரியலூர் மாவட்டத்தில், அரியலூரிலே மருத்துவக் கல்லூரியையும், ஜெயங்கொண்டம் மக்களின் 30, 40 ஆண்டுக்கால கோரிக்கையினை ஏற்று, ஜெயங்கொண்டத்திற்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும் வழங்கிய மாண்புமிகு

2021 பிப்ரவரி 4]

முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதேபோல, அரியலூரிலே மருத்துவக் கல்லூரியை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். தமிழக மக்கள் அனைவருக்கும், இளைஞர்கள், பெரியவர்கள், மாணவர்கள், முதியவர்கள், சிறுவர்கள் என்று அனைத்து மக்களுக்கும், பல நலத் திட்டங்களை தினந்தோறும் வழங்கி வருகின்ற, 2021 சட்டமன்றத் தேர்தலிலும் புரட்சித் தலைவி அம்மாவின் அரசே எடப்பாடியார் அவர்களின் தலைமையிலே அமையும் என்று அனைத்து மக்களும் இன்றைக்குப் போற்றுகின்ற வகையில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களை மீண்டும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் புகழுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதிலே சாதனை படைத்த ஜல்லிக்கட்டு நாயகர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இருட்டிலே தத்தளித்துக் கொண்டிருந்த தமிழகத்தை மீட்டு, இன்றைக்கு ஒளி வெள்ளத்திலே மிதக்கின்ற அளவுக்கு தமிழகத்தை மின்மிகை மாநிலமாக ஆக்கி, இந்தத் துறையை சிறப்பாக நிருவகித்து வருகின்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்றாலும்கூட, மக்கள் நலன் கருதி இதைக் கேட்க விழைகிறேன். எங்கள் ஜெயங்கொண்டம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ள ஜெயங்கொண்டத்தில் Divisional Engineer Office*–ஐ அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களே முன்பு ஒருமுறை உறுதி கொடுத்துள்ளார்கள். எனவே தேர்தலுக்கு முன்பாக ஒரு அரசாணை வெளியிட்டு, ஜெயங்கொண்டத்தில்* D.E. *அலுவலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே*

இந்த சட்டமன்றத்தில் இதுகுறித்து கோரிக்கை வைத்து, அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, இப்போது கோப்புகள் சுற்றோட்டத்தில் இருக்கின்றன. கூடிய விரைவில் அங்கே D.E. அலுவலகம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகன், பொன்மனச் செம்மல், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து, மக்களின் இதயங்களில் நீங்காது இடம்பெற்றிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சியை நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில், கடந்த 2016 ஆம் ஆண்டு மக்களை சந்தித்து வாக்கு கேட்கின்றபொழுது, தங்களது பகுதிகளில் UG cable போடவேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இது அவர்களது நீண்டகால கோரிக்கை. மின்சாரத் துறையிலே புதிய சாதனைகள் படைத்துவரும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், பல சாதனைகளுக்குச் சொந்தக்காரரர். என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியிலே 50 சதவிகிதத்திற்கு மேலாக UG cable போடப்பட்டுள்ளது. சில குறுகலான சாலைகளிலே மின் கம்பங்கள் சாலைகளின் நடுவில் உள்ளன. அதனால், அங்கு ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன; சாலைகளில் செல்ல முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் UG cable–ஐ உடனடியாக அமைத்துத் தரவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் 50 சதவிகிதம் புதைவடத் தடமாக இருக்கின்றது. மீதமுள்ள பகுதிகளுக்கும் புதைவடத் தடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சென்னை மாநகரம் முழுவதுமே புதைவடத் தடம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, பல்வேறு பகுதிகளில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுதுகூட, அந்தப் பகுதியில் புதைவடத் தடம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், அந்தப் பணி நடைபெறுகின்றதா என்பதை ஆய்வு செய்து, அவ்வாறு இல்லையென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினரின் நியாயமான கோரிக்கை உடனடியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

சமுதாயக் கூடம்

***7797—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், இரும்பாநாடு வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS